## வட மத்திய மாகாண சபை – 2014

வட மத்திய மாகாண சபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் அதிகாரச்சட்டத்தின் 23(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசிலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மாகாண சபைகள் அதிகாரச்சட்டத்தின் 23(2) ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை வழங்கப்படுகின்றது.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் மாகாண சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி மாகாண சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து வட மத்திய மாகாண சபையின் 2014 திசெம்பர் 31 இல் இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதி செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 மாகாண சபையின் நிதியம்

மாகாண சபை நிதியத்திற்குரிய மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மே 14 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 2.2.2 ஏனைய கணக்குகள்

மீளாய்வாண்டு தொடர்பாக 2015 ஏப்ரல் 30 ஆம் திகதியில் உள்ளவாறு மாகாண சபையின் ஏனைய கணக்குகளைச் சமர்ப்பித்தல் முன்னேற்றம் கீழே தரப்பட்டுள்ளது.

| | | 2014 ஆம் ஆண்டு தொடர்பாக | | | முன்னைய ஆண்டு தொடர்பாக |
|---|---|---|---|---|---|
| | | கணக்குகளின் மொத்த எண்ணிக்கை | சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளின் எண்ணிக்கை | சமர்ப்பிக்கப்படாத கணக்குகளின் எண்ணிக்கை | சமர்ப்பிக்கப்படாத கணக்குகளின் எண்ணிக்கை |
| (i) | ஒதுக்கீட்டுக் கணக்குகள் | 30 | 30 | - | - |
| (ii) | வருமானக் கணக்குகள் | 23 | 23 | - | - |
| (iii) | மாகாண சபை உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் | 33 | 33 | - | - |
| (iv) | வணிக முற்பணக் கணக்குகள் | 07 | 07 | - | - |
| (v) | நிதியக் கணக்குகள் | 05 | 02 | 03 | 23 |
| (vi) | நியதிச்சட்டக் கணக்குகள் | 07 | 04 | 03 | 01 |
| (vii) | சுயதொழில் சுழற்சி கடன் முற்பணக் கணக்குகள் | - | - | - | 02 |
| | மொத்தம் | 105 | 99 | 06 | 26 |

### 2.2.3 கணக்கீட்டுக் கொள்கைகள்

மாகாண சபை நிதியத்தின் வருமானமும் செலவினமும் அட்டுறு அடிப்படையில் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தன.

### 2.2.4 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வடமத்திய மாகாண சபையின் நிலையான சொத்துப் பதிவேட்டில் காண்பிக்கப்பட்ட பின்வரும் சொத்துக்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்படாமையின் காரணமாக அவற்றின் பெறுமதி நிதிக்கூற்றுக்களிலும் செயலாற்றல் அறிக்கைகளிலும் விடுபட்டிருந்தன.

| சொத்துக்கள் | அளவு |
|---|---|
| காணி | 540 ஏக்கர் 1 றூட் 10 பேர்ச் |
| வாகனங்கள் | 33 |
| கட்டிடங்கள் | 38168 சதுர மீற்றரிலான 124 கட்டிடங்கள் |
| தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் | பாரியளவில் |
| இயந்திரம் மற்றும் இயந்திர உபகரணங்கள் | -மேற்படி- |

(ஆ) நிதிக்கூற்றுக்களிலும் செயலாற்றல் அறிக்கைகளிலும் உள்ள 22 குறிப்புக்களின் பிரகாரம் நீண்ட கால நிதிக்குத்தகை பொறுப்புக்கள் ரூபா 12,888,653 ஆக இருந்த போதிலும் உள்ளபடியான நீண்ட கால குத்தகை பொறுப்புக்கள் ரூபா 10,390,606 ஆக இருந்தது.

(இ) காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டுச் செயற்பாடுகளில் காசுப்பாய்ச்சலின் கீழ் காண்பிக்கப்பட வேண்டிய ரூபா 57,899,982 தொகையான முதலீட்டு வட்டி பெறுவனவுகள் நிதிச் செயற்பாடுகளிலான காசுப்பாய்ச்சலின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

**2.2.5 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) நிதிக்கூற்றினதும் செயலாற்றல் அறிக்கையின் பட்டோலை இலக்கம் 03 இன் பிரகாரம் 05 நிறுவனங்களுக்குரிய முற்செலுத்துகைகள் ரூபா 1,726,487 ஆக இருந்த போதிலும் அந்த நிறுவனங்களின் ஒதுக்கீட்டுக் கணக்கின் அட்டவணை (iii) இல் எதிர்வரும் வருடங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள் தொடர்பான அறிக்கையின் பிரகாரம் அது ரூபா 802,439 ஆக இருந்தது.

(ஆ) நிதிக்கூற்றினதும் செயலாற்றல் அறிக்கையினதும் பட்டோலை இலக்கம் 01 இலும் 02 இலும் உள்ளடக்கப்பட்ட பொறுப்புக்கள் மற்றும் அமைச்சினதும் திணைக்களங்களினதும் ஒதுக்கீட்டுக் கணக்கில் டீ.ஜீ.எஸ்.ஏ - 8 படிவத்தில் காண்பிக்கப்பட்ட பொறுப்புக்களுக்குமிடையே ரூபா 8,202,595 இணக்கஞ் செய்யப்படாத வேறுபாடு காணப்பட்டது.

(இ) மாகாண திறைசேரி மற்றும் மாகாண வருமானத் திணைக்களத்தினால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்ட 03 வருமானக் கணக்குகளில் ரூபா 126,744,276 தொகையான வருமானம் நிதிக்கூற்றினதும் செயலாற்றல் அறிக்கையினதும் 01 ஆம் இலக்க மற்றும் 02 ஆம் இலக்க 02 அட்டவணைகளின் பிரகாரம் ரூபா 127,715,642 ஆனமையால் ரூபா 971,366 இணக்கஞ் செய்யப்படாத வேறுபாடு காணப்பட்டது.

**2.2.6 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) பதிலளிக்கப்படாத கணக்காய்வு ஐயவினாக்கள்

மாகாண கமநல திணைக்களத்தினால் அமுல்படுத்தப்பட்ட ரூபா 14,459,914 கிரயமான நிர்மாண செயற்திட்டங்கள் தொடர்பாக வழங்கப்பட்ட கணக்காய்வு ஐயவினாவையும் உள்ளடக்கிய 2013 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்ட 04 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் பராமரிக்கப்படாமை

மாகாண பிரதம அமைச்சினால் பொருட் பதிவேடும் உத்தியோகபூர்வ இல்லங்களின் பதிவேடும், மாகாண கமநல திணைக்களத்தினால் இழப்புப் பதிவேடும் பொது வைப்புப் பதிவேடும் முறையாகவும் நளதுவரையாகவும் பேணப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(இ) தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) பிரதம அமைச்சின் கீழ் தாபிக்கப்பட்ட ஊடகப் பிரிவை பேணிச் செல்வதற்காக மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்ட ரூபா 5,528,833 தொகையான கொடுப்பனவுகளின் சரியான தன்மை மற்றும் மாகாண சபையின் ஆரம்பம் முதல் மீளாய்வாண்டின் இறுதிவரை அந்த ஊடகப் பிரிவிற்காகக் கொள்வனவு செய்யப்பட்ட பல்வேறு உபகரணங்களின் பெறுமதி அல்லது அந்த பொருட்களின் உள்ளவாறான தன்மையை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான மெய்மையாய்வுச் சபை அறிக்கை மற்றும் பொருட் பதிவேடு என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2014 திசெம்பர் 18 ஆந் திகதியும் அதன் பின்னரும் பல்வேறு சந்தர்ப்பங்களில் எழுத்து மூலமாகவும் வாய்மொழியாகவும் 2014 ஆம் ஆண்டின் நிதிக் கணக்காய்விற்குத் தேவையான தகவல்கள் கோரப்பட்டிருந்த போதிலும் பிரதம அமைச்சின் பதவியணியினரால் ரூபா 8,003,983 தொகையான 106 கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களை உள்ளடக்கிய அந்தத் தகவல்கள் வழங்குதலைத் தாமதமப்படுத்துதல் அல்லது புறக்கணித்த காரணத்தால் மீளாய்வாண்டின் கணக்காய்வு 2015 ஏப்ரல் 24 ஆந் திகதி வரையிலும் பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்தது.

(iii) மாதாந்த கணக்குப் பொழிப்பு, சமூகமளித்தவர்களின் வரவுப் பதிவேடும் ஏனைய தகவல்களும், முறையான விலைப்பட்டியல், நலனாளிகள் தொடர்பான விபரம், இருப்புப் பதிவேடு நிழற்படப் பிரதிகள், விநியோகித்தல் கட்டளை போன்ற தேவையான சான்றுகள் பிரதம அமைச்சிடம் காணப்படாமையின் காரணமாக மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்ட ரூபா 148,911,967 தொகையான 36 கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமான சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

(iv) வருகை மற்றும் வெளிச்செல்கை பதிவேடு மற்றும் பட்டியல் போன்ற சான்றுகள் மாகாண கமநல அமைச்சிடம் காணப்படாமையின் காரணமாக மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்ட ரூபா 3,675,763 தொகையான கொடுக்கல் வாங்கல்கள் சரியானது என கணக்காய்வின் போது ஏற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

(v) மாகாண நன்னடத்தை திணைக்களத்தால் பாடசாலை மாணவர்கள், நன்னடத்தையாளர்களுக்கு அறிவூட்டுவதற்காக நடாத்தப்பட்ட 35 நிகழ்ச்சித்திட்டங்களுக்குரிய ரூபா 2,177,035 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் அந்த நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல் தொடர்பாக உறுதிப்படுத்தும் சான்றுகள் எதுவும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

---

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) 1987 இன் 42 ஆம் இலக்க மாகாணசபைகள் அதிகாரச் சட்டம் | | அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்காத வகையில் சபை முதல்வர் எதிர்க்கட்சித் தலைவர், ஆளுங்கட்சியின் பிரதம அமைப்பாளர் மற்றும் எதிர்க்கட்சியின் பிரதம அமைப்பாளர் போன்ற 04 பதவிகள் ஏற்படுத்தப்பட்டு மாகாணசபை உறுப்பினர்களுக்கு உரித்தான வரப்பிரசாதங்களை விஞ்சி வரப்பிரசாதங்கள் வழங்கப்பட்டிருந்தன. உரிய பதவிக்குரியவர்களுக்கு 2014 ஆம் ஆண்டின்போது வழங்கப்பட்ட வரப்பிரசாதங்களுக்காக ரூபா 6,461,136 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் முன்னைய இரண்டு வருடங்களின் போதும் வழங்கப்பட்ட அந்த வரப்பிரசாதங் களுக்காக ரூபா 11,056,750 தொகையும் செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஆ) தாபன விதிக்கோவை | | |
| XXIV ஆம் அத்தியாயத்தின் 4.2.5, 4.4, 4.4.1, 4.5 மற்றும் 4.6 ஆம் பிரிவுகள் | 4,184,402 | 1992 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் ஆயுர்வேதத் திணைக்களம், மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம், மாகாண சுகாதார அமைச்சு என்பவற்றில் சேவையாற்றி மரணித்த, ஓய்வுபெற்ற, சேவையை விட்டுச் |

| | | | |
|---|---|---|---|
| | | | சென்ற மற்றும் வேலை இடைநிறுத்தம் செய்யப்பட்ட 95 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்படவேண்டிய கடன் மீதி அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| | XIX ஆம் அத்தியாயத்தின் 5.2 மற்றும் 5.3 ஆம் பந்திகள் | 137,959 | 03 மாகாண வைத்தியசாலைகளின் வீடுகளில் குடியிருக்கும் ஏழு உத்தியோகத்தர்களிடமிருந்து வீட்டு வாடகையை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |
| (இ) | வட மத்திய மாகாண நிதி 261.2.2 | 4,114,500 | அனுராதபுரம் பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திலும் மாகாண பிரதம அமைச்சிலும் 06 பதவிநிலைத்தர உத்தியோகத்தர்களுக்கு ரூபா 100,000 தொகையான முற்பண எல்லையினை விஞ்சி 07 சந்தர்ப்பங்களின் போது உப கட்டுநிதி செலுத்தப்பட்டிருந்ததுடன் அந்த நிறுவனங்களில் பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கு முதலாவதாக வழங்கப்பட்ட செயல்நிமித்த உப கட்டு நிதி தீர்க்கப்படாதிருந்த 64 சந்தர்ப்பங்களின் போது மீண்டும் மீண்டும் அந்த உத்தியோகத்தர் களுக்கு செயல்நிமித்த உப கட்டுநிதி செலுத்தப்பட்டிருந்தது. |

(ஈ) நிதிப் பிரமாணம்

| | | |
|---|---|---|
| 571 | 2,298,507 | மாகாண ஆயுர்வேதத் திணைக்களத்திலும் மாகாண காணி ஆணையாளர் திணைக்களத்திலும் பொது வைப்புக் கணக்குகளில் 02 வருடங்களை விஞ்சிய வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாண ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| 1645(அ) | - | பிரதம செயலகம், உள்ளகக் கணக்காய்வு மற்றும் புலனாய்வுத் திணைக்களம், மாகாணத் திட்டமிடல் மற்றும் செயற்பாட்டுத் திணைக்களத்தினால் அவற்றிற்குரிய வாகனங்களின் சகல தகவல்களும் குறிப்பிடப்பட்ட சம்பவத்திரட்டுப் புத்தகம் முறையாகப் பேணப்பட்டிருக்கவில்லை. |
| 1646 | | பிரதம செயலகம், உள்ளகக் கணக்காய்வு மற்றும் புலனாய்வுத் திணைக்களம், மாகாணத் திட்டமிடல் மற்றும் செயற்பாட்டுத் திணைக்களத்தினால் அவற்றிற்குரிய வாகனங்களுக்குரிய ஒவ்வொரு மாதத்திற்குமான நாளாந்த ஓட்ட அட்டவணைகள் மற்றும் மாதாந்தப் பொழிப்புக்கள் என்பன அடுத்துவரும் மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (உ) | 1990 ஒக்தோபர் 10 ஆந் திகதிய 11/90 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கை | | சகல வாகங்களினதும் எரிபொருள் எரிவு 06 மாதங்களுக்கு ஒரு தடவை பரீட்சிக்கப்பட வேண்டிய போதிலும் மாகான சபையின் வாகனங்களின் எரிபொருள் எரிவு பரிசோதனை செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ஊ) | கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 2.8.1 (ஆ) பிரிவு | 4,028,260 | மாகாண சபையின் கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தால் 36 மடி கணனிகள் மற்றும் 31 பல்நோக்கு அச்சிடல் இயந்திரங்கள் கொள்வனவு செய்வதற்காக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவிற்குரிய விடயங்கள் தொடர்பாக விஷேட நிபுணத்துவ அறிவுடைய அங்கத்தரொருவர் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. |

### 2.2.8 போதியளவான அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) டிசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு சேமிக்கப்பட்ட கட்டுநிதி மீதிகள் அடுத்த ஆண்டின் சனவரி 10 ஆந் திகதியில் அல்லது மாகாண திறைசேரியினால் தீர்மானிக்கப்படுகின்ற திகதிக்கு முன்னர் திரும்பச் செலுத்த வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களுடனான குறிப்புக்களின் படி டிசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 18 கட்டுநிதிக் கணக்குகளில் தீர்க்கப்படாத வரவு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 374,621,850 ஆக இருந்தது. அதில் 85 சதவீதமான ரூபா 318,744,139 தொகையான மீதியொன்று மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் தீர்க்கப்பட வேண்யிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களுடனான குறிப்புக்களின் படி ரூபா 11,136,395 தொகையான மாகாண அமைச்சு / திணைக்களங்களை உள்ளடக்கிய 12 நிறுவனங்களினால் தீர்க்கப்படாத கட்டுநிதி மீதிகள் 04 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் கொண்டுவரப்படுவதுடன் அந்த மீதிகளின் சரியான தன்மையினை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு அந்த நிறுவனங்களிடம் எழுத்துமூல சான்றுகள் காணப்படவில்லை.

(இ) நிதிக்கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் அறிக்கைகளுடனான 15 குறிப்புக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மாகாண அரச உத்தியோகத்தர்களுக்கு 08 முற்பணக் கணக்குகளில் ரூபா 2,165,429 கூட்டுத்தொகையான செலவு மீதிகளும் 02 வணிக முற்பணக் கணக்குகளில் ரூபா 6,008,357 கூட்டுத்தொகையான செலவு மீதிகளும் காணப்பட்டன. அதற்கு மேலதிகமாக மாகாண திறைசேரியின் 5000 ஆம் இலக்க விடய அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கில் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 590,398 செலவு மீதி ரூபா 659,308 தொகை வரை ரூபா 68,910 இனால் மீளாய்வாண்டின் போது மேலும் அதிகரித்திருந்தது.

(ஈ) மாகாண அளுநர் செயலகத்திலும் மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்திலும் மாகாண அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகளுக்குரிய ஆகக் குறைந்த பெறுவனவு எல்லைக்கு ரூபா 5,399,422 இனால் அடையப்படாதிருந்ததுடன் மாகாண கூட்டுறவுத்துறை ஆணைக்குழுவிலும் மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்திலும் மாகாண அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகளுக்குரிய வரவு மீதியில் ஆகக்கூடிய எல்லை ரூபா 15,557,594 இனால் மிகைத்திருந்தது.

(உ) மாகாண பொறியியல் திணைக்களத்தினால் மீளாய்வாண்டின் போது மத்திய அரசாங்கத்தின் அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களுக்கு வழங்கப்பட்ட பொறியியல் உசாத்துணைப் பணிகளுக்காகக் கிடைத்த மதியுரைக் கட்டணங்களிலிருந்து நிருவாகச் செலவினங்களைச் செய்ததன் பின்னர் சேமிப்புக்கள் மாகாண சபை நிதியத்திற்கு செலவு வைக்கப்படாது பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

அதில் ரூபா 1,067,724 தொகை முறையான அங்கீகாரமின்றி திணைக்கள உத்தியோகத்தர்களுக்குச் செலுத்தப்பட்டிருந்ததுடன் மாகாண கைத்தொழில் அபிவிருத்தித் திணைக்களத்தின் விற்பனைத் தொகுதியை நிர்மாணிக்கும் செயற்திட்டத்தின் மதியுரைச் சேவைகளை நிறைவேற்றுவதற்காக தனியார் நிறுவனமொன்றிற்கு ரூபா 3,038,330 தொகை மாகாண சபை நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது.

(ஊ) மாகாண சபையின் தவிசாளர் மற்றும் உப தவிசாளர்களினால் தவிசாளருக்கும் உப தவிசாளருக்கும் உரித்தான பிரத்தியேக உத்தியோகபூர்வ பதவியணியினர்களுக்கு மேலதிகமாக உறுப்பினர் ஒருவருக்கு உரித்தான பிரத்தியேக பதவியணியினருக்காகவும் உரிய சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 1,515,120 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

## 03. வருமான முகாமைத்துவம்

மாகாண சபையினால் 23 வருமானத் தலைப்புகளின் கீழ் ரூபா 2,751,657,246 தொகையான வருமானம் மீளாய்வாண்டின் போது சேகரிக்கப்பட்டிருந்தது. அதனை முன்னைய ஆண்டின் ரூபா 2,326,770,418 தொகையான வருமானத்துடன் ஒப்பீடு செய்த போது 18 சதவீதம் அதாவது ரூபா 424,886,828 தொகையான அதிகரிப்பினைக் காட்டியது. அவ்வாறே மீளாய்வாண்டின் மாகாண சபையின் 23 வருமானத் தலைப்புகளின் கீழ் அந்த வருமானம் மாகாண சபையின் மொத்த வருமானத்தில் 21 சதவீதமாக இருந்ததுடன் அந்த சதவீதம் முன்னைய ஆண்டில் 23 சதவீதமாக இருந்தது. பிரதான சில வருமானத் தலைப்புக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| வருமானத் தலைப்பு இலக்கம் மற்றும் விபரம் | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | உள்ளபடியான வருமானம் | அதிகரிப்பு (குறைவு) | அவதானிப்பு |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | |
| 10.02.05.04 மோட்டார் போக்குவரத்துத் | 50,000,000 | 104,860,533 | 54,860,533 | மதிப்பிடப்பட்ட வருமானம் ரூபா 54,860,533 இனால் மிகைத்து வருமானம் சேகரிக்கப்பட்டமையால் மதிப்பீடு |

| | | | | |
|---|---|---|---|---|
| தணைக்களத்தினால் மோட்டார் வாகனங்களைப் பதிவுசெய்தல் கட்டணம் | | | | பொருத்தமற்றதாகவும் பிழையாகவும் இருந்தமை அவதானிக்கப்பட்டது. |
| 10-02-07-00 முத்திரை வருமானம் | 200,000,000 | 394,540,996 | 194,540,996 | மதிப்பிடப்பட்ட வருமானம் 95 சதவீதத்தினால் மிகைத்து முத்திரை வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. |
| 20-02-02-03 முதலீட்டு வட்டி | 35,000,000 | 85,121,577 | 50,121,577 | மதிப்பிடப்பட்ட வருமானம் ரூபா 50,121,577 இனால் மிகைத்து வருமானம் சேகரிக்கப்பட்டமையால் மதிப்பீடு பொருத்தமற்றதாகவும் பிழையாகவும் இருந்தமை அவதானிக்கப்பட்டது. |
| 10.02.12.00 தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி | 1,500,000,000 | 1,038,138,168 | (461,861,832) | மதிப்பிடப்பட்ட வருமானம் அடையப்படாமை 31 சதவீதமாகும். |
| 10.03.07.09 ஏனைய அனுமதிப்பத்திரக் கட்டணம் | 800,000 | 91,350 | (708,650) | மதிப்பிடப்பட்ட வருமானம் அடையப்படாமை 89 சதவீதமாகும். |
| 20.03.02.99 நானாவித பெறுவனவுகள் | 33,000,000 | 121,612,690 | 88,612,690 | மதிப்பிடப்பட்ட வருமானம் ரூபா 88,612,690 இனால் மிகைத்து வருமானம் சேகரிக்கப்பட்டமையால் மதிப்பீடு பொருத்தமற்றதாகவும் பிழையாகவும் இருந்தமை அவதானிக்கப்பட்டது. |
| 10-02-09-00 வியாபாரப் புரள்வு வரி | 7,000,000 | 13,822,738 | 6,822,738 | மீளாய்வாண்டில் உள்ளபடியான வியாபாரப் புரள்வு வரி வருமானம் மதிப்பிடப்பட்ட வருமானத்தை 97 சதவீதத்தினால் மிகைத்திருந்தது. |
| 10-02-04-05- உள்நாட்டு மதுபான அனுமதிப்பத்திரக் கட்டணம் | 25,000,000 | 46,981,760 | 21,981,760 | மீளாய்வாண்டில் உள்ளபடியான வருமானம் மதிப்பிடப்பட்ட வருமானத்தை 88 சதவீதத்தினால் மிகைத்திருந்தது. |

| | | | | |
|---|---|---|---|---|
| 10-02-07-01 ஆதனக் கையளித்தல் அடிப்படையிலான முத்திரைக் கட்டணம் | 65,000,000 | 79,407,368 | 14,407,368 | மதிப்பிடப்பட்ட வருமானம் 22 சதவீதத்தினால் மிகைத்து மீளாய்வாண்டில் வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. |
| 20-03-03-01 நீதிமன்ற தண்டப் பணம் | 190,000,000 | 144,216,403 | 45,783,597 | மதிப்பிடப்பட்ட வருமானத்தை விட 15 சதவீதத்தினால் மீளாய்வாண்டில் உள்ளபடியான வருமானம் வீழ்ச்சியடைந்திருந்தது. |
| 20.03.02.30 கனிப்பொருள் வரி வருமானம் | 5,000,000 | 5,131,586 | 131,586 | திறைசேரியினால் நேரடியாக அனுப்பப்பட்ட ரூபா 726,021 வருமானம் கணக்கு தயாரிக்கும் போது கவனத்தில் கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| 20.03.02.27 மருந்து மற்றும் இரசாயண வரி | 130,000 | 425,263 | 295,263 | வரி செலுத்துவோர் தொடர்பான தகவல்கள் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தரிடம் காணப்படவில்லை. |

பின்வரும் அவதானிப்புக்களும் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மாகாண நிதி விதி 41.1.4 இன் படி, இயலுமானவரை சாத்தியமானதாவும் சரியாகவும் மதிப்பீடு தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியிருந்த போதிலும் கடன் மற்றும் முற்பண வட்டி வருமானத்தை மதிப்பீடு செய்யும் போது ஒவ்வொரு வருடங்களிலும் உத்தியோகத்தர்களின் தரத்தின் படி பெறப்பட்ட கடன் மற்றும் முற்பணம், மீள்கடன் மற்றும் முற்பணக் கொடுப்பனவு மேற்கொள்ளப்படக்கூடிய அளவுகள் கவனத்தில் கொள்ளப்பட்டு மீளாய்வாண்டில் ஏற்படக்கூடிய உள்ளபடியான வரவு மீதியின் அடிப்படையில் வட்டி கணிப்பிடப்பட்டு மதிப்பிடு தயாரிக்கப்படாமல் எவ்வித அடிப்படையுமின்றி முன்னைய ஆண்டுகளின் உள்ளபடியான வருமானத்தை கவனத்தில் கொண்டு மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(ஆ) மாகாண சபை ஆரம்பிக்கப்பட்டு 25 வருடங்கள் கடந்திருந்த போதிலும் மாகாணத்தில் அமைந்துள்ள அடகு பிடிப்பு நிலையங்கள் சட்டரீதியாக்கப்பட்டு அவற்றை பதிவு செய்தல் மற்றும் வருடாந்த அனுமதிப்பத்திரக் கட்டணத்தை அறவிடுவதற்குரிய பிரமாணங்கள் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. அடகு பிடிக்கும் நிலையங்களை பதிவு செய்தல், வருடாந்த அனுமதிப்பத்திரத்தை விநியோகித்தல் மற்றும் அவற்றிற்குரிய கட்டணங்களை அறவிடல் தொடர்பான ஆலோசனைகள் மாகாண சபையினால் வழங்கப்படாமையினால் அதன் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாதிருந்ததாக பிரதேச செயலாளர்களினால் அறிவிக்கப்பட்டிருந்தது.

(இ) மாகாண வருமானத் திணைக்களத்தினால் நீதிமன்றத் தண்டப்பணங்களை அறவிடுவதற்காக வடமத்திய மாகாணத்தில் உள்ள நீதிமன்றங்களுக்கு என்சீ - 100 மாதிரிப் பத்திரம் விநியோகிக்கப்பட்டிருந்த போதிலும் அந்தப் புத்தகங்களில் அறவிடப்பட்ட தண்டப்பணம் தொடர்பாக பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக நீதிமன்றங்களினால் அனுப்பட்ட தண்டப்பணங்களின் அளவின் சரியான தன்மையினை ஏற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்ததுடன் பயன்படுத்தப்பட்ட பற்றுச்சீட்டுப் புத்தகங்களை மீளப்பெற்றுக் கொள்ளாமல் மீண்டும் பற்றுச்சீட்டுப் புத்தகங்கள் விநியோகிக்கப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(ஈ) மாகாண காணி ஆணையாளர் திணைக்களத்தினால் குத்தகை அறவிடவேண்டிய காணியின் அளவு மற்றும் அறவிடவேண்டிய குத்தகை அளவு தொடர்பான விபரங்களை உள்ளடக்கிய பதிவேடு பேணப்படாமையின் காரணமாக காணி குத்தகை வருமானம் குறிப்பாக மதிப்பீடு செய்ய முடியாதிருந்ததுடன் ஆண்டின் இறுதியில் நிலுவைக் வாடகை வருமானக் கணிப்பீட்டையும் செய்ய முடியாதிருந்தது.

(உ) மாகாண சபை நிதிக்கூற்றுக்களின் படி, வனவிலங்குகள் மற்றும் மரங்கள் வருமானத் தலைப்பில் மதிப்பிடப்பட்ட வருமானம் ரூபா 30,000,000 ஆக இருந்த போதிலும் வருமானக் கணக்கின் பிரகாரம் மதிப்பிடப்பட்ட வருமானம் காண்பிக்கப்படாதிருந்ததுடன் உள்ளபடியான வருமானமும் காணப்படவில்லை. எவ்வாறாயினும் திறைசேரிப்

புத்தகங்களின் படி ரூபா 24,700 தொகை உள்ளபடியான வருமானமாக இருந்தது.

(ஊ) ஒவ்வொரு பிரதேச செயலக பிரதேசங்களிலும் பதிவு செய்யப்பட்ட மதுபான அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை, ஒவ்வொரு ஆண்டுகளிலும் சேகரிக்கப்பட வேண்டிய அனுமதிப்பத்திரக் கட்டண வருமானத்தின் அளவு, பிரதேச செயலகத்தினால் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்ட வருமானம் மற்றும் அனுப்பப்படாது நிறுத்தி வைக்கப்பட்ட வருமானம் மற்றும் அனுமதிப்பத்திரம் வருடாந்தம் புதுப்பிக்காத அனுமதிப்பத்திரதாரர்களின் எண்ணிக்கை போன்ற விபரங்களை பெறக்கூடிய வகையில் மதுபான அனுமதிப்பத்திரதாரர்களின் பதிவேடொன்று மாகாண வருமானத் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்டு நாளதுவரையாக பேணப்பட்டிருக்கவில்லை.

## 04. நிதி மீளாய்வு

### 4.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான மாகாண சபை நிதியத்தில் ரூபா 63,101,757 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 102,194,257 ஆக இருந்தது.

### 4.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது மீளாய்வாண்டின் மீண்டெழும் செலவினம் ரூபா 1,880,473,663 இனால் அதிகரித்தும் அரசாங்கத்தின் மூலதன மானியம் ரூபா 1,663,962,685 இனால் குறைவடைந்திருந்த போதிலும் நிதி விளைவுகள் ரூபா 39,092,500 இனால் அதிகரித்திருந்ததுடன் அதற்காக அரசாங்கத்தின் மீண்டெழும் மானியம் ரூபா 2,829,258,000 இனாலும் வாடகை வருமானம் ரூபா 379,422,737 இனாலும் அதிகரித்திருந்தமை பிரதானமாகத் தாக்கமளித்திருந்தன.

## 05 அதிகாரசபைக் கணக்கு / நிதியக் கணக்குகளும் வணிக முற்பணக் கணக்குகளும்

### 5.1 அதிகாரசபைக் கணக்குகள் / நிதியக் கணக்குகள்

வடமத்திய மாகாண சபையினால் அங்கீகரிக்கப்பட்ட விதப்புரைகளின் கீழ் 05 அதிகாரசபைகள் உருவாக்கப்பட்டிருந்ததுடன் 07 நிதியங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றன.

### 5.1.1 வடமத்திய மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை

மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்டிருந்தும் மீளாய்வாண்டின் போதும் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்ட ரூபா 1,640,000 கிரயமான வாகனங்கள் இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 16 இன் படி மீள் மதிப்பீடு செய்யப்பட்டு அப்பெறுமதி மற்றும் அதிகாரசபைக்குச் சொந்தமான காணிகளின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு அதன் பெறுமதி நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வாடகைக் கொள்வனவு தவணைப்பணம் செலுத்தி முடிக்கப்பட்ட 02 கெப் வாகனங்களின் ரூபா 2,278,260 பெறுமதி வாடகை கொள்வனவு கடன்கொடுத்தோரில் கழித்துக் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) வங்கி சிட்டைகளின் படி மீளாய்வாண்டின் போது ரூபா 31 மில்லியன் நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்ததுடன் ஆண்டின் போது நிலையான வைப்புக்கள் காசாக்கப்பட்டிராத போதிலும் ஆண்டின் ஆரம்பத்தில் ரூபா 150 மில்லியன் தொகையான நிலையான வைப்புக்களின் அளவு மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களிலும் காண்பிக்கப்பட்டமையின் காரணமாக ரூபா 31 மில்லியன் நிதிக் கூற்றுக்களில் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) நாளதுவரையாக்கப்பட்ட பொதுப் பேரேடு மற்றும் நாட்குறிப்பு 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 1,910,442 தொகையான மொத்த நடைமுறைப் பொறுப்புக்கள் உள்ளடக்கப்பட்டு தயாரிக்கப்பட்ட பொறுப்புக் கூற்றுக்கள், நாளதுவரையாக்கப்பட்ட நிலையான சொத்துப் பதிவேடு, சேகரிக்கப்பட்ட சகல வருமானங்களையும் காண்பிக்கின்ற வருமானக் கணக்கு, நாளதுவரையாக்கப்பட்ட பொது வைப்புப் பதிவேடு, நாளதுவரையாக்கப்பட்ட நிலையான வைப்புப் பதிவேடு போன்றவை முறையாகப் பேணப்படாமையினாலும் அவற்றிற்குரிய தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையினாலும் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வின் போது போதியளவானதும் பொருத்தமானதுமான சான்றுகளை சேகரிக்க முடியாதிருந்தது.

### 5.1.2 வடமத்திய மாகாண முன்பள்ளி சிறுவர் அபிவிருத்தி அதிகாரசபை

மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) டிக்கிரி டிக்கிரி மற்றும் சிறுவர் அமுதம் என்ற 226,927 செய்திப் பத்திரிகைகள் விற்பனையினால் கிடைத்த ரூபா 3,200,370 தொகைக்காக நிதிப்பிரமானம் 165 மற்றும் 168 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் பற்றுச்சீட்டு விநியோகிக்கப்பட்டு பதவிநிலை உத்தியோகத்தர் ஒருவரின் மேற்பார்வையின் கீழ் பதிவேடுகளுக்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே அந்த பத்திரிகைகளின் அச்சிடல், பகிர்ந்தளித்தல் மற்றும் விற்பனை தொடர்பான போதியளவான விபரங்கள் நிறுவனத்திடம் காணப்படவில்லை.

(ஆ) அதிகாரசபையின் தலைவரினால் 2014 ஆம் ஆண்டின் இறுதி 03 மாதத்திற்காக ஆசிரியர் படிகளைச் செலுத்துவதற்காக பெறப்பட்ட ரூபா 900,000 தொகை உரிய தரப்பினருக்கு செலுத்தப்படாது அவர்களின் தனிப்பட்ட பாவனைக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தது.

(இ) அதிகாரசபையின் மீண்டெழும் செலவினங்களுக்காக பிரதம அமைச்சினால் வழங்கப்பட்ட பணத்தில் ரூபா 2,397,910 தொகை சனாதிபதியின் பாரியார் வருகை தந்த விழாவிற்கும் சனாதிபதிக்கு நினைவுச் சின்னம் வழங்கும் விழாவிற்குமாக செலவிடப்பட்டிருந்ததுடன்

அதற்கான அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே அந்த செலவினங்களை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான போதியளவான விலைப் பட்டியல்களும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.1.3 வடமத்திய மாகாண அபிவிருத்தி வடிவமைப்பு மற்றும் இயந்திர உபகரண முகவராண்மை

முகவராண்மையினால் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 2.8.1(அ) (ஆ) மற்றும் (இ) இலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் முறையான கொள்வனவு மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் அங்கீகாரம் மற்றும் நிறுவனத்தின் பணிப்பாளர் சபையின் அங்கீகாரமின்றி ரூபா 1,225,000 தொகையான டிஜிட்டல் அச்சிடல் இயந்திரமொன்று 2013 ஒக்டோபர் மாதத்தின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இயந்திரம் பொருத்தப்பட்டு குறுகிய காலத்தில் பழுதுபார்த்தல் மேற்கொள்ளப்பட்டமையினால் அது ஏதோவொரு நிறுவனமொன்றில் பயன்படுத்தப்பட்டு கழற்றி அகற்றப்பட்டிருந்த இயந்திரமாக இருந்தமை வெளிப்படுத்தப்பட்டது.

(ஆ) 2002 ஆம் ஆண்டிற்கு முன்னரான காலப்பகுதிக்காக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்ப வேண்டிய ரூபா 1,174,400 தொகையான வியாபாரப் புரள்வு வரி மற்றும் பொருட்கள் சேவைகள் வரி என்பன உரிய பிரகாரம் அனுப்பப்படாமையினால் அப்பணத்தை அறவிடுவதற்கு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டிருந்தது.

(இ) 2002 இன் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரி அதிகாரச்சட்டத்தின் கீழ் 2002 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் நிறுவனத்தினால் சேகரிக்கப்பட்ட ரூபா 18,165,671 தொகையான பெறுமதி சேர் வரி உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2009 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரையான காலத்திற்குரிய ரூபா 3,109,880 தொகையான ஊழியர் சேமலாப நிதியத்தின் பங்களிப்புப் பணம் 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய அதிகாரச் சட்டத்தின் 10(1) மற்றும் (2) பிரிவுகளின் ஏற்பாடுகளின் பிரகாரம் அனுப்பப்படாமையின் காரணமாக ரூபா 1,683,200 மிகைக் கட்டணமொன்று விதிக்கப்பட்டிருந்தது.

(உ) தொழில் வழங்குனர் நிறுவனத்துடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்படாமல் 2014 ஆம் ஆண்டின் போது அனுராதபுர மாவட்டத்தில் குளத்தை அண்மித்து 304 குடிநீர் கிணறுகளை தோண்டுவதற்காக ரூபா 4,890,160 தொகையான 735 இயந்திர மணித்தியாலங்கள் வேலை செய்யப்பட்டிருந்த போதிலும் உரிய சேவை பங்களிப்பு நிறுவனம் இந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக ரூபா 2,161,427 தொகை மாத்திரம் செலுத்தியதன் காரணமாக முகவராண்மைக்கு ரூபா 2,728,733 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தது.

### 5.1.4 வட மத்திய மாகாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை

அதிகாரசபைக்குரிய மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2014 ஆம் ஆண்டின் போது கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் விற்பனைப் பொருட்கள், சுற்றுலா ஹோட்டல்களில் வைப்பதற்காக ரூபா 133,333 தொகை செலவிடப்பட்டு 10 கண்ணாடிப் பலகை அலுமாரிகள் தயாரிக்கப்பட்டிருந்தன. அதில் 06 அலுமாரிகள் சுற்றுலா ஹோட்டல்களிலும், ஒரு அலுமாரி கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் அலுவலக வளவில் விற்பனைக் கடையிலும் எஞ்சிய 03 அலுமாரிகளும் அலுவலக வளவில் திறந்த வெளியில் பாதுகாப்பற்று வைக்கப்பட்டிருந்ததுடன் அந்த சகல அலுமாரிகளையும் அதிகாரசபையின் சொத்துக்களாக கணக்கீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளின் போது 126 நலனாளிகளுக்குச் செலுத்தப்பட்ட ரூபா 3,387,940 தொகையான தொழிற்சாலை உபகரணக் கடன், வாயுச் சீராக்கி இயந்திரக் கடன், பல்நோக்கு மரவேலை இயந்திரக் கடன், சுயதொழில் கடன் மற்றும் துவிச்சக்கர வண்டிக் கடன்களிலிருந்து ரூபா 1,450,453 தொகை நிலுவையாகக் காணப்பட்டது.

### 5.1.5 வடமத்திய மாகாண பயணிகள் போக்குவரத்து சேவை அதிகாரசபை

அதிகாரசபைக்குரிய மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2008 யூன் 26 ஆந் திகதிய 14/2008 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் படி மாதாந்த போக்குவரத்துப் படி ரூபா 30,000 ஆக இருந்த போதிலும் அந்தப்படி ரூபா 40,000 வீதம் வழங்கப்பட்டமையின் காரணமாக அதிகாரசபையின் தலைவருக்கு ரூபா 120,000 தொகையும் பொது முகாமையாளருக்கு ரூபா 20,000 ஆக ரூபா 140,000 கூட்டுத் தொகையானது மீளாய்வாண்டின் போது மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) 2011 பெப்ரவரி 9 ஆந் திகதிய 13/2008 (iv) ஆம் இலக்க சுற்றறிக்கையினால் திருத்தப்பட்ட 2008 யூன் 26 ஆந் திகதிய 13/2008 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் மாதாந்த எரிபொருள் படி 140 லீற்றராக இருந்த போதிலும் 170 லீற்றர் வீதம் வழங்கப்பட்ட காரணத்தினால் அதிகாரசபையின் தலைவருக்கும் பொது முகாமையாளருக்கும் முறையே ரூபா 57,978 மற்றும் ரூபா 14,607 தொகை மீளாய்வாண்டின் போது மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது. அந்த எரிபொருள் அளவிற்கு மேலதிகமாக பிரதம செயலாளரின் தனிப்பட்ட அங்கீகாரமின்றி பெறப்பட்ட எரிபொருளுக்காக முறையே அதிகாரசபையின் தலைவருக்கு 06 சந்தர்ப்பங்களில் ரூபா 58,431 தொகையும் பொது முகாமையாளருக்கு 03 சந்தர்ப்பங்களில் ரூபா 25,887 தொகையும் செலுத்தப்பட்டிருந்தன.

### 5.1.6 வடமத்திய மாகாண சுற்றாடல் அதிகாரசபை

2012 சனவரி மாதத்தின் போது உருவாக்கப்பட்ட இந்த அதிகாரசபைக்குரிய மீளாய்வாண்டினதும் முன்னைய ஆண்டுகளினதும் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.1.7 வடமத்திய மாகாண அவசர சந்தர்ப்ப நிதியம்

மீளாய்வாண்டிற்கான நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் வெளிப்படுத்தப்பட்ட பிரதான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) நிதியம் ஆரம்பிக்கப்பட்ட 1990 ஆம் ஆண்டு முதல் அந்த நிதியத்தின் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிதியம் உருவாக்கப்பட்டு 24 வருடங்களை கடந்திருந்த போதிலும் விதப்புரையின் 20(3) இன் பிரகாரம் இந்த நிதியத்தை அமுல்படுத்துலதற்கு தேவையான விதிகள் ஆளுநரினால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.1.8 வடமத்திய மாகாண பிரதம அமைச்சு நிதியம்

மீளாய்வாண்டு மற்றும் கடந்த 02 வருடங்களுக்குரிய நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நிதியத்தில் ரூபா 5,185,974 தொகை காணப்பட்டது.

### 5.1.9 வடமத்திய மாகாண ஊக்குவிப்பு நிதியம்

நிதித்திற்குரிய மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நிதியேற்பாட்டின் பெறுவனவாக காண்பிக்கப்பட்ட ரூபா 6,694,950 தொகை 2011 இன் இரண்டாவது அரையாண்டு மற்றும் 2014 இன் ஆரம்ப அரை வருடங்களுக்காக இருந்த போதிலும் குறிப்புக்களின் மூலம் அல்லது ஒவ்வொரு அரை ஆண்டுகளுக்குரிய தொகை தனித்தனியாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2011 இன் அரையாண்டின் போது செலுத்தப்பட்ட ரூபா 3,216,116 தொகையான ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் தயாரிக்கப்பட்ட முறை குறிப்புக்களின் மூலம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.1.10 வடமத்திய மாகாண கிராமிய அபிவிருத்தி நிதியம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2011 இன் 03 ஆம் இலக்க வடமத்திய மாகாண கிராம அபிவிருத்தி நியதிச்சட்டத்தின் 26 ஆவது பிரிவின் பிரகாரம் 2012 சனவரி மாதத்தின் போது இந்த நிதியம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. மாகாண சபை நிதியத்திலிருந்து எவ்வாறான விடயங்களுக்கு செய்யப்பட முடியுமென கணக்காய்வு செய்தல் அரசியலமைப்பின் 154 ஆவது உருப்புரையிலும் 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபை அதிகாரச்சட்டத்தின் 23(1) மற்றும் 23(2) பிரிவுகளில் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும் இந்த நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட வேண்டியமை பிரமாண விதப்புரைகளில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. நியதிச்சட்டத்தின் 26(2) பிரிவின் பிரகாரம் இந்த நிதியம் 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பகுதியின் ஏற்பாடுகளுக்கு இணங்கி இருக்க வேண்டியமையினால் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் நிதியம் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கிராம அபிவிருத்தி நிதியத்தின் கிராம முன்னேற்ற பண்டிகை நிகழ்ச்சித்திட்டங்கள், புலதிசி மங்கள சிகினய மற்றும் கிராம அபிவிருத்தி நிறக் கொடி அச்சிடல்களுக்காக ரூபா 2,000,000 கூட்டுத்தொகையான செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அந்த செலவினங்களை செய்தல் தொடர்பாக தீர்மானம் எடுக்கும் போது எந்தத் தீர்மானத்திற்கும் கிராம அபிவிருத்தி நிதியத்தின் தலைவரான அமைச்சுச் செயலாளரின் எழுத்து மூல இணக்கப்பாடு பெறப்பட்டிருக்கவில்லை.

## 5.1.11 வடமத்திய மாகாண கல்வி அபிவிருத்தி நிதியம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2005 சனவரி மாதத்தின் போது ஆரம்பிக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்ட இந்த நிதியத்தில் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 8,331,893 மீதி காணப்பட்டது. 2004 யூன் 23 ஆந் திகதிய 1346/8 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியின் 8(1) ஆம் பந்தி மற்றும் வட மத்திய மாகாண நிதி விதி 372.1 இன் பிரகாரம் நிதியம் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரையான நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கல்வி அபிவிருத்தி நிதியத்தின் நிதி நிலைமையை முன்னேற்றுவதற்காக 1,800,000 லொத்தர் சீட்டுக்கள் அதிபர்களுக்கு முறையான பிரகாரம் கையளிக்கப்பட்டிருந்த போதிலும் திம்புலாகல, பொலன்னறுவை மற்றும் ஹிங்குரக்கொடை வலயங்களில் 94 பாடசாலை அதிபர்களினால் கையேற்கப்பட்ட ரூபா 4,993,000 பெறுமதியான 24,965 சீட்டுப்புத்தகங்களில் எவ்வித சீட்டுக்களும் விற்பனை செய்யப்படாதிருந்ததுடன் அந்த சீட்டுப்புத்தகங்கள் மீள அமைச்சிற்கு கையளிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.2 வணிக முற்பணக் கணக்குகள்

### 5.2.1 ரஜரட்ட எப்.எம். சேவை முற்பணக் கணக்கு

வடமத்திய மாகாண சபைக்கும் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திற்குமிடையே வானொலிக் காலத்தை ஒதுக்குவதற்காக 2011 மே 06 ஆந் திகதி ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கை 2014 சனவரி 31 ஆந் திகதி வலுவிழப்பதாக ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் அறிவித்திருந்த போதிலும் 2014 சனவரி 01 ஆந் திகதி 05 உத்தியோகத்தர்கள் சேர்க்கப்பட்டிருந்ததுடன் அந்த உத்தியோகத்தர்களுக்கு மாதமொன்றிற்கு ரூபா 40,000 படி 03 மாத காலத்திற்காக ரூபா 120,000 செலுத்துவதற்கு 2014 மார்ச் 14 ஆந் திகதி அமைச்சின் செயலாளர் அங்கீகாரம் வழங்கியிருந்தார். ரஜரட்ட எப்.எம். இன் இணைப்பாளரின் 2014 சனவரி 03 ஆந் திகதிய கடிதத்திற்கு அமைச்சின் செயலாளர் விரைவாக பதிலளித்திருப்பாராயின் உரிய நியமனங்கள் வலுவிழக்கச் செய்யப்பட்டு முறையற்ற வகையில் செலுத்தப்பட்ட மேற்கூறப்பட்ட ரூபா 120,000 தொகையான கொடுப்பனவை தவிர்த்திருக்க முடியும் என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

### 5.2.2 தார் கொள்வனவு முற்பணக் கணக்கு

மீளாய்வாண்டிற்கான வணிக முற்பணக் கணக்குகள் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2014 சனவரி 01 ஆந் திகதியில் உள்ளவாறு அறவிடவேண்டியிருந்த ரூபா 26,465,683 தொகையான கடன்பட்டோர் மீதியில் ஆண்டின் போது 43 சதவீதம் அல்லது ரூபா 11,357,380 தொகை மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டில் ரூபா 13,153,518 தொகையான மொத்த தார் விற்பனைகளிலிருந்து ஆண்டின் போது பணமாக 8 சதவீதமான ரூபா 1,013,907 தொகை மாத்திரமே சேகரிக்கப்பட்டிருந்தது.

(இ) தார் முற்பணக் கணக்கு பேணிச் செல்லும் நோக்கத்தை குறிப்பாக விளக்குவதற்கு அதிகாரசபை தவறியிருந்ததுடன், வணிக முற்பணக் கணக்காக இந்தக் கணக்கு இனங்காணப்பட்டிருந்தது. கிரயத்தில் 10

சதவீதத்துடன் விலையிடப்பட்டு தார் வீதிகளை பராமரிப்பதற்காக ஒப்பந்தாக்காரர்களுக்கு வழங்கும் அடிப்படையில் உள்ளபடியாக தேறாத இலாபமொன்றை கணக்குகளின் மூலம் காண்பிப்பதற்கு அதிகாரசபை முயற்சி எடுத்திருந்தது.

### 5.2.3 தரக் கட்டுப்பாட்டு முற்பணக் கணக்கு

மீளாய்வாண்டிற்கான வணிக முற்பணக் கணக்கு தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மாகாண பொறியியல் திணைக்களத்தின் தரக் கட்டுப்பாட்டுப் பிரிவின் நிதியத்திலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட நிலையான சொத்துக்களின் பெறுமதி கணக்குகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) முற்பணக் கணக்கு செயற்பாடுகளின் விடயப்பரப்பின் கீழ் கொண்டுவரப்படாத ரூபா 64,960 தொகையான பொறியியல் சங்கத்தின் சுற்றுலாக் கட்டணக் கொடுப்பனவு முற்பணக் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது.

(இ) கெக்கிராவ, இலங்கை வங்கியில் பேணப்பட்டு வந்த நடைமுறைக் கணக்கொன்றில் 2014 யூலை முதல் திசெம்பர் வரையான காலத்தில் ரூபா 1.5 மில்லியன் முதல் ரூபா 7 மில்லியன் வரையான பணம் வட்டி வருமானமின்றி விளைவற்றதாக நிறுத்திவைக்கப்பட்டது.

### 5.2.4 விவசாய அபிவிருத்தி முற்பணக் கணக்கு

மீளாய்வாண்டிற்கான வணிக முற்பணக் கணக்குகள் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2006 ஆம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக கணக்குகளில் காண்பிக்கப்பட்ட ரூபா 16,295 தொகையான வழியில் நின்ற காசு மீதி இனங்காணப்பட்டு தேவையான சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2014 ஆம் ஆண்டிற்கான தீர்மானிக்கப்பட்ட ரூபா 700,000 தொகையான ஆகக் குறைந்த எல்லை ரூபா 283,838 இனால் அடையப்பட்டிருக்கவில்லை.

## 06. செயற்பாட்டு மீளாய்வு

## 6.1 செயலாற்றல்

**6.1.1** மீளாய்வாண்டின் போது மாகாண சபைக்குக் கிடைத்த அபிவிருத்தி மானியங்களைப் பயன்படுத்துவதற்காக அங்கீகரிக்கப்பட்ட, அமுல்படுத்தப்பட்ட மற்றும் பூர்த்திசெய்யப்பட்ட செயற்திட்டங்கள் தொடர்பான விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | மாகாண சபை அபிவிருத்தி மானியம் | | மாகாண குறித்தொதுக்க அபிவிருத்தி மானியம் | | உலக வங்கி உதவி | | ஏனைய மூலதனச் சொத்து மானியம் | நட்புறவு மானியம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | புதிய செயற்திட்டம் | தொடர்ச்சியான செயற்திட்டம் | புதிய செயற்திட்டம் | தொடர்ச்சியான செயற்திட்டம் | புதிய செயற்திட்டம் | தொடர்ச்சியான செயற்திட்டம் | தொடர்ச்சியான செயற்திட்டம் | புதிய செயற்திட்டம் | தொடர்ச்சியான செயற்திட்டம் |
| அங்கீகரிக்கப்பட்ட அபிவிருத்திச் செயற்திட்டங்களின் எண்ணிக்கை | 1062 | 344 | 350 | 302 | 226 | 48 | 01 | 54 | 25 |
| அமுல்படுத்தப்பட்ட செயற்திட்டங்களின் எண்ணிக்கை | 1059 | 242 | 550 | 266 | 218 | 35 | 01 | 54 | 25 |
| ஆண்டின் போது பூர்த்திசெய்யப்பட்ட செயற்திட்டங்களின் எண்ணிக்கை | 855 | 199 | 264 | 257 | 149 | 22 | 01 | 23 | 23 |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| அங்கீகரிக்கப்பட்ட செலவினம் (ரூபா 000') | 594,492 | 389,496 | 535,232 | 452,177 | 424,171 | 156,242 | 35,000 | 61,698 | 13,301 |
| ஆண்டின் போது ஏற்பட்ட செலவினம (ரூபா 000') | 471,994 | 203,938 | 290,164 | 427,543 | 240,271 | 91,509 | 17,920 | 52,793 | 12,775 |

பின்வரும் அவதானிப்புகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மாகாண சபை அபிவிருத்தி மானியத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட ரூபா 594,492,450 தொகையான புதிய 1062 அபிவிருத்தி செயற்திட்டங்களில் 1059 செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டு அதற்காக ரூபா 471,994,662 தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் ஆண்டின் போது 855 அபிவிருத்தி செயற்திட்டங்கள் மாத்திரமே பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. அவ்வாறே மீளாய்வாண்டில் நடைமுறை வேலையாகக் காணப்பட்ட ரூபா 389,496,180 தொகையான 344 அபிவிருத்தி செயற்திட்டங்களில் 242 செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டு அதற்காக ரூபா 203,938,178 தொகை பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் 199 அபிவிருத்தித் செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன.

(ஆ) மாகாண குறித்தொதுக்க அபிவிருத்தி மானியத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட ரூபா 535,232,725 தொகையாக புதிய 550 அபிவிருத்தி செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டு அதற்காக ரூபா 290,164,778 தொகை பயன்படுத்தப்பட்டது. எவ்வாறாயினும் 264 அபிவிருத்தி செயற்திட்டங்கள் மாத்திரமே பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. அவ்வாறே மீளாய்வாண்டில் நடைமுறை வேலையாகக் காணப்பட்ட ரூபா 452,177,540 தொகையான 302 அபிவிருத்தி செயற்திட்டங்களில் 266 செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டு அதற்காக ரூபா 427,543,764 தொகை பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் 257 செயற்திட்டங்கள் மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன.

(இ) உலக வங்கி உதவியின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட ரூபா 424,171,200 தொகையான புதிய 226 அபிவிருத்தி செயற்திட்டங்களில் 218 செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டு அதற்காக ரூபா 240,271,620

தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் ஆண்டின் போது 149 செயற்திட்டங்கள் மாத்திரமே பூர்த்திசெய்யப்பட்டிருந்தன. அவ்வாறே மீளாய்வாண்டில் நடைமுறை வேலையாகக் காணப்பட்ட ரூபா 156,242,120 தொகையில் மதிப்பீடு செய்யப்பட்ட 48 அபிவிருத்தி செயற்திட்டங்களில் 35 செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டு அதற்காக ரூபா 91,509,266 தொகை பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும் ஆண்டின் போது 22 செயற்திட்டங்கள் மாத்திரமே பூர்த்திசெய்யப்பட்டிருந்தன.

(ஈ) நட்புறவு மானியத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட ரூபா 61,698,270 தொகையான புதிய 54 செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டு அதற்காக ரூபா 52,793,314 தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் ஆண்டின் போது 23 செயற்திட்டங்கள் மாத்திரமே பூர்த்திசெய்யப்பட்டிருந்தது. அவ்வாறே ரூபா 13,301,176 தொகையான மீளாய்வாண்டில் தொடர் வேலையாகக் காணப்பட்ட 25 செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டு அதற்காக ரூபா 12,775,284 தொகை பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் அதில் 23 செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன.

(உ) ஏனைய மூலதன சொத்து மானியத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட ரூபா 35,000,000 தொகையான புதிய அபிவிருத்தி செயற்திட்டமொன்று அமுல்படுத்தப்பட்டு ஆண்டின் போது பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் ரூபா 17,920,150 தொகை மாத்திரமே செலுத்தித் தீர்க்கப்பட்டிருந்தது.

6.1.2 2011 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியின் போது மீளமைக்கப்பட்ட குளங்களுக்கிடையே கணக்காய்வினால் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட 06 குள மீளமைப்புக்களுக்காக திணைக்களத்தினால் ரூபா 10,452,210 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் உரிய சாத்திய வள ஆய்வு அறிக்கை சமர்ப்பிக்கப்படாமையினால் ஒட்டுமொத்த செலவிடல்களின் பொருளாதார நலனை கணக்காய்வின் போது மீளாய்வு செய்ய முடியாதிருந்தது.

## 6.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மாகாண கைத்தொழில் அபிவிருத்தித் திணைக்களத்தினால் 20 கைப்பணி நிலையங்களை நடாத்திச் செல்லும் 07 ஏக்கர் 85 பேர்ச் அளவான காணிகளின் உரித்து அரசாங்கம்/ அதிகாரசபை அல்லது ஏனைய வெளி நபர்களுக்குச் சொந்தமாக இருந்ததுடன் அந்தக் காணிகளின் உரித்தை திணைக்களத்திற்கு கையேற்பதற்கு 2015 மே 29 வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரணவிறு தூபியை நிர்மாணிப்பதற்காக 2014 ஆம் ஆண்டின் போது ஆளுநர் செயலகத்திற்கு ரணவிறு சேவை அதிகாரசபையிலிருந்து ரூபா 1,095,000 தொகையும், ரணவிறு உபகார விழா மற்றும் ரணவிறு பிரிவின் நடவடிக்கைகளுக்காக மாகாண திறைசேரியிலிருந்து ரூபா 600,000 தொகையும் கிடைத்திருந்தது. எவ்வாறாயினும் ஆளுநர் செயலகத்தினால் ரணவிறு உபகார விழா மாத்திரம் நடாத்தப்பட்டு ரூபா 1,464,134 தொகை மாகாணத் திறைசேரிக்கு மீள அனுப்பப்பட்டிருந்தது.

(இ) 2014 ஆம் ஆண்டில் ஆயுர்வேதத் திணைக்களத்தில் 03 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதியேற்பாடு போதியளவில் இல்லாததாகக் குறிப்பிடப்பட்டு ரூபா 21,861,000 கூட்டுத்தொகையான குறைநிரப்பு நிதியேற்பாடு அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் அதில் 81 சதவீதமான ரூபா 17,641,307 தொகை சேமிக்கப்பட்டிருந்தது.

(ஈ) வடமத்திய மாகாண காணி அபிவிருத்தி நியதிச்சட்டத்தை அமுல்படுத்துவதற்காக மாகாண காணி ஆணையாளர் திணைக்களத்தினால் அமுல்படுத்தப்பட்ட செயற்பாடுகள் தொடர்பான செயல்முன்னேற்ற அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) மஹவிலச்சிய பிரதேச வைத்தியசாலைக் கட்டிடம் மற்றும் உத்தியோகபூர்வ இல்லங்களுடன் உள்ள காணியின் உரித்தைத் தீர்த்து வைப்பதற்கும் அனுமதியற்ற கைப்பற்றல்கள் தொடர்பாக முன்னைய ஆண்டின் போது கணக்காய்வு ஐயவினாவொன்று

விநியோகிக்கப்பட்டிருந்த போதிலும் அனுமதியற்ற கைப்பற்றல்களைத் தவிர்த்துக் கொள்வதற்கு முறையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) மாகாண சபை மற்றும் மாகாண சபை செயலகத்தினால் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்களில் பாரிய அளவில் மாகாண சபை அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு முரணாக நியமிக்கப்பட்ட 04 பதவியாளர்களுக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் அந்தப் பொருட்கள் மாகாண சபை செயலக வளவில் அமைந்துள்ள அந்த நான்கு பதவியாளர்களின் அலுவலகத்தில் காணப்படவில்லை. தலைவரினதும் உப தலைவரினதும் மற்றும் எதிர்கட்சித் தலைவரினதும் பதவியணிக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 5,830,380 தொகை சம்பளம் மற்றும் படிகளாக செலுத்தப்பட்டிருந்த போதிலும் அந்தப் பதவியணியின் வருகையை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு போதியளவான சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் அலுவலகத்தை பரிசோதனை செய்தபோது அவர்கள் அலுவலகத்தில் சேவையில் ஈடுபட்டிருக்காதிருந்தமையும் உறுதிப்படுத்தப்பட்டது.

## 6.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சமூக சேவைகள் திணைக்களத்தினால் ஊனமுற்ற நபர்களின் கோரிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு தேவையின் அடிப்படையில் உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கு தீர்மானிக்கப்படாமல் மீளாய்வாண்டின் போது ரூபா 11,951,677 கூட்டுப்பெறுமதியான 09 வகையான உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 13,994,647 பெறுமதியான இருப்பொன்று களஞ்சியத்தில் எஞ்சியிருந்தது.

(ஆ) 2014 ஆம் ஆண்டின் திசெம்பர் 30 ஆந் திகதி பாரம்பரிய ஆயுர்வேத வைத்தியர்களுக்கு வழங்குவதற்காக எழுதிக் கையொப்பமிடப்பட்ட ரூபா 1,100,900 பெறுமதியான 404 காசோலைகள் 2015 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் அவர்களுக்கு வழங்கப்படாமல் நிறுவனத்திலேயே நிறுத்தி

வைக்கப்பட்டிருந்ததுடன் அக்காசோலைகளின் 30 நாட்களான செல்லுபடிக்கால எல்லையும் கடந்திருந்த போதிலும் அது தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) கணக்காய்வு ஐயவினாவொன்றின் மூலம் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கும் போதும் 2012/2013 பெரும்போகத்தில் நெல் கொள்வனவு செய்வதற்காக கஹடகஸ்திகிலிய பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு வழங்கப்பட்ட ரூபா 1,000,000 தொகையான முற்பணத்தைத் தீர்ப்பதற்காக முகாமைத்துவத்தினால் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2015 மார்ச் 03 ஆந் திகதி தம்புத்தேகம மாவட்ட வைத்தியசாலையில் மருந்து இருப்புப் பதிவேடுகளை பரீட்சித்த போது 31 மருந்துப் பட்டியல் பத்திரங்களுக்குரிய ரூபா 6,338,310 பெறுமதியான மருந்து இருப்புக்கள் அந்தப் பதிவேடுகளில் உள்ளடக்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(உ) 2013 ஆம் ஆண்டின் திசெம்பர் மாதம் 01 ஆந் திகதி முதல் ஹொரவப்பொத்தானை வைத்தியசாலையின் மருத்துவ ஆய்வுகூட பரிசோதனையாளரின் வெற்றிடமொன்று காணப்பட்ட காரணத்தால் 11 மாதங்கள் அளவிலான காலம் முதல் ஆய்வுகூடம் மூடப்பட்டிருந்ததுடன் அதனால் ஆய்வுகூடத்தில் பரீட்சிப்பதற்கு பயன்படுத்தப்படுகின்ற இரசாயனப் பொருட்கள் பயன்பாடின்றிக் காணப்பட்டன. அவ்வாறே 09 வகைகளுக்குரிய ரூபா 493,186 பெறுமதியான இரசாயனப் பொருள் இருப்பு காலவதியாகியிருந்தது.

(ஊ) 2008 பெப்ரவரி மாதத்தின் போது தம்புத்தேகம மாவட்ட வைத்தியசாலையில் ரூபா 3,894,043 தொகை செலவில் நிர்மாண நடவடிக்கைகள் பூர்த்திசெய்யப்பட்ட அவசர சிகிச்சைப் பிரிவின் நடவடிக்கைகள் மீளாய்வாண்டின் போதிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) வடமத்திய மாகாண பிரதம அமைச்சின் நோக்கங்கள் மற்றும் பணிகளில் உள்ளடக்கப்படாத, அவ்வாறே வடமத்திய மாகாண சபையின் ஏனைய அமைச்சுக்கள், திணைக்களங்களை உள்ளடக்கிய நிறுவனங்களிலும்,

மத்திய அரசாங்கத்தின் அமைச்சுகள் மற்றும் திணைக்களங்களையும் உள்ளடக்கிய நிறுவனங்களின் நோக்கங்கள் மற்றும் பணிகளை உள்ளடக்கிய சில செயற்பாடுகள் பிரதம அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்ட அந்த நடவடிக்கைகளுக்காகச் செலுத்தப்பட்ட தொகை ரூபா 65,362,633 ஆக இருந்தது.

(ஏ) ரண்பிமட அருனலு செயற்திட்டத்தின் கீழ் அமுல்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்ட 39 செயற்பாடுகளில் 28 செயற்பாடுகள் ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் நோக்கங்கள் மற்றும் செயற்பாடுகளுக்குரியதாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 6.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மாகாண சபை பிரதம அமைச்சரினதும் மாகாண சபை அமைச்சர்களினதும் படிகள் மற்றும் அவர்களின் பிரத்தியேக பதவியணியினர்களின் படிகளுக்காக ஒவ்வொரு அமைச்சின் செலவினத் தலைப்பின் கீழ் ஒதுக்கப்பட்ட நிதியேற்பாடுகளிலிருந்து அதன் மொத்தப் படிகளும் செலுத்தப்பட்டிருந்தன. எவ்வாறாயினும் அந்தக் கொடுப்பனவுகளுக்கு மேலதிகமாக மாகாண சபைச் செயலக செலவினத் தலைப்பின் கீழ் 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 4,877,400 தொகையான சாரதி படியும் பிரத்தியேக பதவியணியினரது படியும் செலுத்தப்பட்டிருந்ததுடன் முன்னைய இரண்டு ஆண்டுகளின் போது செலுத்தப்பட்ட அத்தகைய படிகளின் பெறுமதி ரூபா 8,056,200 ஆகும்.

(ஆ) கிராம அபிவிருத்தித் திணைக்களத்திற்குரிய வாகனமொன்றிற்காக நிரந்தர சாரதியொருவர் நியமிக்கப்பட்டிருக்கும் போது கல்வி, கலாசார அமைச்சரின் பிரத்தியேக பதவியணியில் அமைய சாரதியொருவரும் அவ்வாகனத்தில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு மீளாய்வாண்டின் சனவரி முதல் திசெம்பர் வரையான காலத்திற்காக ரூபா 282,693 தொகை சம்பளமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(இ) மாகாண காணி ஆணையாளர் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களுக்கும் பிரதேச செயலகங்களில் காணிக் கடமைகளில் ஈடுபட்டிருக்கின்ற உத்தியோகத்தர்களுக்கும் ஊக்குவிப்புப் படியாக 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 3,415,893 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும், அந்த உத்தியோகத்தர்கள் நேரடியாக வாடகை வருமானங்களைச் சேகரிப்பதற்கு பங்களிக்கின்றமை அல்லது உரிய உத்தியோகத்தர்களின் பிரதேசங்களில் உள்ள காணி குத்தகையாளரிடமிருந்து குத்தகைப் பணம் சேகரிக்கப்படுகின்றமையையோ உறுதிப்படுத்துகின்ற சான்றுகள் எதுவும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் ஊக்குவிப்புப் படி செலுத்துவதற்காக அல்லது ஊக்குவிப்புப் படி உத்தேசத் திட்டத்திற்காக முறையான அங்கீகாரமொன்று மாகாண ஆளுநரிடமிருந்து பெறப்பட்டிருக்கவில்லை.

(ஈ) வடமத்திய மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் சேவையாற்றிய இரண்டு வைத்திய உத்தியோகத்தர்களுக்கு 2014 ஆம் ஆண்டின் போது முற்பகல் 8.30 மணிக்கு முற்பட்ட காலத்திற்காகவும் பகல் 12.00 – 13.00 இற்கும் இடையிலான காலத்திற்காகவும் கடமை நேரம் 356¼ மணித்தியாலத்திற்காக ரூபா 146,716 தொகையான மேலதிக நேரப்படி செலுத்தப்பட்டிருந்தது.

(உ) ஹொரவப்பொத்தானை பிரதேச வைத்தியசாலையில் சேவையில் நியமிக்கப்பட்ட நிலையப் பொறுப்பு வைத்திய உத்தியோகத்தரை உள்ளடக்கிய இரண்டு வைத்திய உத்தியோகத்தர்களுக்கு 1999 மார்ச் மாதம் 17 ஆம் திகதிய 02/99 ஆம் இலக்க சுகாதார அமைச்சின் பொது சுற்றறிக்கையின் 05 ஆம் பந்திக்கு முரணாக அரசின் உத்தியோகபூர்வ இல்லங்களில் பிரத்தியேக வைத்திய சேவையில் ஈடுபட்டிருந்த போதிலும் அதற்காக மேற்கூறப்பட்ட சுற்றறிக்கையின் 11 ஆம் பந்தியின் பிரகாரம் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 6.5 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

**கொள்வனவு வழிகாட்டி நடைமுறைகளை பின்பற்றாமை**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

i. கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 2.14.1 இக் பிரகாரம் திணைக்கள கொள்வனவு குழுவொன்று ரூபா 2 மில்லியனுக்குக் குறைந்த கொள்வனவுகளின் போது முத்திரையிடப்பட்ட ஐந்து கூறு விலைகளுக்கு குறையாத எண்ணிக்கையில் கோரப்படவேண்டிய போதிலும் விலங்கின உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தினால் 2014 திசெம்பர் 31 ஆந் திகதி 31 பல்நோக்கு அச்சிடல் இயந்திரங்கள் ரூபா 840,100 இற்குக் கொள்வனவு செய்யும் போது 03 நிறுவனங்களிலிருந்து மாத்திரம் கூறுவிலை பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

ii. கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 2.14.1 இற்கு மேலதிகமாக 2012 பெப்ரவரி 23 ஆந் திகதி வழங்கப்பட்ட 21 ஆவது மேலதிக பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் பொருட்கள் மற்றும் சேவைகள் கொள்வனவுகளின் பெறுமதி ரூபா 2 மில்லியனுக்கு மேற்படுமிடத்து அந்தக் கொள்வனவுகளின் அதிகாரம் அமைச்சின் கொள்வனவுக் குழுவிற்கு கையளிக்கப்பட வேண்டிய போதிலும் விலங்கின உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் ரூபா 2,784,626 தொகையான நாட்டுக் கோழி கட்டுப்பாட்டுத் செயற்திட்டத்திற்காக கொள்வனவு நடைமுறைகள் திணைக்கள கொள்வனவு குழுவினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

iii. 2011 மார்ச் 09 ஆந் திகதிய கொள்வனவு கைநூலிற்கான 22 ஆவது பிரிவின் பிரகாரம் கொள்வனவு நடவடிக்கைகளுக்கான நேர் ஒப்பந்த வழங்கலின் போது இதுவரை கையளிக்கப்பட்ட ஒப்பந்தங்களின் மொத்தப் பெறுமதி மற்றும் உத்தேச ஒப்பந்தத்தின் பெறுமதி என்பவற்றின் கூட்டுத்தொகை ரூபா 2 மில்லியனை விஞ்சாதிருக்க வேண்டும். அதற்கு முரணாக அநுராதபுரம் பிரதேச சுகாதார பணிப்பாளர் அலுவலகத்தினால் ரூபா 2,612,028 தொகையான 02 ஒப்பந்தங்கள் 18 ஆம் இலக்க சமுர்த்தி கிராமச் சங்கமொன்றிற்கு ஒரேகாலப்பகுதியில் கையளிக்கப்பட்டிருந்தது.

iv. 2006 இன் கொள்வனவு வழிகாட்டிக் கோவை 2.14.1 மற்றும் கொள்வனவுக் கைநூலின் 21 ஆம் பிரிவின் பிரகாரம் பிரதேச கொள்வனவுக் குழு ஒன்றிற்கு சந்தை விலை ஒப்பீட்டு முறைமை பின்பற்றப்பட்டு பொருட்கள் மற்றும் சேவைகள் கொள்வனவு செய்யக்கூடிய எல்லை ரூபா 500,000 ஆக இருந்த போதிலும், அதற்கு முரணாக அநுராதபுர பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் பிரதேச கொள்வனவுக் குழுவினால் அந்த எல்லையினை விஞ்சி 03 சந்தர்ப்பங்களின் போது ரூபா 2,612,409 தொகையான கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

## 6.6 வெளிப்படையான மோசடிகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2007 நவம்பர் 19 ஆந் திகதிய சீஎஸ்ஏ/பீ1/40 ஆம் இலக்க கடிதத்தில் திருத்தப்பட்ட 2006 சனவரி 04 ஆந் திகதிய சம இலக்கம் கொண்ட அதிமேதகு சனாதிபதி அவர்களின் சுற்றறிக்கைக் கடிதத்தின் 2.1 ஆம் பந்தியின் பிரகாரம் கௌரவ பிரதம அமைச்சரின் பாவனைக்காகவும் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காகவும் ஒதுக்கப்படக்கூடிய ஆகக் கூடிய உத்தியோகபூர்வ வாகனங்களின் எண்ணிக்கை 03 ஆக இருந்த போதிலும் வடமத்திய மாகாண கௌரவ பிரதம அமைச்சர் அதன் அங்கீகரிக்கப்பட்ட எல்லையினை மிகைத்து 15 வாகனங்கள் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் அந்த வாகனங்களுக்காக ரூபா 5,989,771 பெறுமதியான 44,800 லீற்றர் எரிபொருள் பெறப்பட்டிருந்தது.

(ஆ) கௌரவ பிரதம அமைச்சருக்கு ஒதுக்கப்பட்ட இரண்டு உத்தியோகபூர்வ வாகனங்கள் மற்றும் பாதுகாப்பு வாகனம் என்பன டீசல் வாகனங்கள் ஆனமையால் 2007 நவம்பர் 19 ஆந் திகதிய அதிமேதகு சனாதிபதி அவர்களின் சுற்றறிக்கையின் படி உத்தியோகபூர்வ இரண்டு டீசல் வாகனங்கள் மற்றும் பாதுகாப்பு வாகனமொன்றிற்கும் உரித்தான எரிபொருள் எல்லையினை விஞ்சி ஆண்டின் போது 13250 லீற்றர் எரிபொருள் பெறப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 1,800,983 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(இ) 2006 சனவரி 04 ஆந் திகதிய சீஎஸ்ஏ/பீ1/40 ஆம் இலக்க அதிமேதகு சனாதிபதி அவர்களின் சுற்றறிக்கையின் 1.1 ஆம் பந்தியின் பிரகாரம் அமைச்சர் ஒருவருக்கு உரித்தான பிரத்தியோக பதவியணியினரை விஞ்சி பதவியணியினர் பேணப்பட்ட காரணத்தினால் மீளாய்வாண்டின் போது மேலதிக பதவியணியினருக்காக செலுத்தப்பட்ட சம்பளம், மேலதிக நேர மற்றும் பிரயாணச் செலவினங்களின் கிரயம் ரூபா 9,634,113 ஆக இருந்தது.

(ஈ) வாகனங்களுக்கு எரிபொருள் கட்டளை விநியோகிப்பதற்கு முன் வாகனப் பொறுப்பு உத்தியோகத்தர்களிடமிருந்து பெறப்பட்ட எரிபொருள் விண்ணப்பப் பத்திரங்களில் பிரதம அமைச்சின் செயலாளர் அல்லது அவரினால் அதிகாரம் கையளிக்கப்பட்ட அரசாங்க உத்தியோகத்தோரினால் கட்டளை விநியோகிப்பதற்கு அதிகாரமளிக்கப்பட வேண்டிய போதிலும் அமைச்சுச் செயலாளரின் உத்தியோகபூர்வ முத்திரை பயன்படுத்தப்பட்டு பிரதம அமைச்சர் அல்லது அவரின் பிரத்தியேக பதவியணியினரின் உத்தியோகத்தர் ஒருவருக்கு எரிபொருள் கட்டளை விநியோகிப்பதற்கு அதிகாரம் வழங்கப்பட்டு அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட வாகனங்களுக்கு எரிபொருள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

## 6.7 சொத்துக்கள் முகாமைத்துவம்

தாபன விதிக்கோவையின் XIX ஆம் அத்தியாயத்தின் 6.10 ஆம் பிரிவு மற்றும் 1971 இன் 03 ஆம் இலக்க மற்றும் 1974 இன் 40 ஆம் இலக்க அதிகாரச் சட்டங்களினால் திருத்தப்பட்ட 1969 இன் 07 ஆம் இலக்க அரசாங்க வீடுகள் அதிகாரச்சட்டத்தின் (உரித்தினை மீளப்பெறுதல்) பிரகாரம் உத்தியோகத்தர் ஒருவர் மரணமடையும் பொழுது அரசாங்கத்தின் வீட்டினை மீள கையளிக்க வேண்டி போதிலும் அந்த நியதிகளுக்கு புறம்பாக மரணித்த உத்தியோகத்தரின் குடும்ப அங்கத்தவர்களால் 2004 ஏப்ரல் 29 ஆம் திகதி முதல் 11 வருட காலங்கள் எவ்வித வாடகையும் செலுத்தாமல் அரசாங்கத்தின் வீடொன்றில் வாழ்ந்து வருகின்றனர். எவ்வாறாயினும் 2015 மார்ச் மாதத்தில் கணக்காய்வு பரிசோதனைத் திகதி வரையிலும் அந்த வீடு மீளப் பெறப்பட்டிராததுடன் வாடகைக் காலம் முடிவடைந்து உத்தியோகபூர்வ வீடுகளில் குடியிருக்கும் 04 உத்தியோகத்தர்களுக்கு எதிராக தாபன விதிக்கோவையின் XIX ஆம்

அத்தியாயத்தின் 6.14 ஆம் உப பிரிவு மற்றும் 1969 இன் 07 ஆம் இலக்க அரசாங்க வீடுகள் அதிகாரச்சட்டத்தின் (உரித்தினை மீளப்பெறுதல்) பிரகாரம் முறையான வகையில் நடவடிக்கை எடுக்காமையினால் அதில் குடியிருப்பவர்களால் வருபவர்களினால் அரசாங்கத்தின் ஆதனங்களை கைப்பற்றுவதற்காக நீதிமன்ற நடவடிக்கைகள் எடுத்து பலாத்காரமாக அரசாங்கத்தின் வீடுகளில் குடியிருந்து வருகின்றமையும் அவதானிக்கப்பட்டது.

## 6.8 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கிராம அபிவிருத்தி திணைக்களத்தினால் 2013 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 318,878 பெறுமதியான சுயதொழில் உபகரணங்களில் 04 வகை 2015 சனவரி 14 ஆம் திகதி வரையிலும் பகிர்ந்தளிக்கப்படாமல் களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) பக்மீகஹஉல்பத்த குளத்தின் மதகிலிருந்து வெளியாகும் நீரை வயல்களுக்கு கொண்டு செல்வதற்காக பிரதான வாய்க்கால் மற்றும் சிறு வாய்க்கால்களை அமைப்பதற்காகவும் குளத்தின் கீழ் உள்ள காணிகளை இனங்கண்டு கண்காணிப்பு செய்யப்படாமையினால் அந்தக் குளத்தை மீளமைப்பதற்காக செலவிடப்பட்ட ரூபா 2,610,560 தொகை விளைவற்ற செலவினமாக இருந்தது.

(இ) மாகாண பொறியியல் திணைக்களத்திற்குச் சொந்தமான 03 வாகனங்கள் 02 இற்கும் 10 வருடங்களுக்கு இடைப்பட்ட காலமாக விளைவற்றுக் காணப்பட்டன.

(ஈ) 2012 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 264,510 பெறுமதியான Binocular Microscope 01 மற்றும் EC Meter 01 என்பன கொள்வனவு செய்யப்பட்ட திகதி முதல் 2015 ஏப்ரல் மாதத்தின் கணக்காய்வுப் பரிசோதனைத் திகதி வரையிலும் எவ்வித பயன்பாட்டிற்கும் எடுக்கப்படாது சேவை பயிற்சி மறுசீரமைப்பு நிறுவனத்தில் விளைவற்றுக் காணப்பட்டன.

## 6.9 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கௌரவ மாகாண அமைச்சர்கள் மற்றும் ஆளுநர்களுக்காக வருடாந்தம் ரூபா 1,387,391 தொகை ஆயுட் காப்புறுதித் தவணைப் பணம் செலுத்தப்பட்டிருந்துதுடன் அந்தக் கொடுப்பனவுகளை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திலிருந்து பெறப்பட்ட பற்றுச்சீட்டு அல்லது ஏனைய ஆவணங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை விஞ்சி 20 உத்தியோகத்தர்களுக்கு அமைச்சரின் பிரத்தியோக பதவியணியினர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுக் கொண்டிருக்கும் போது மீளாய்வாண்டில் ரூபா 9,804,032 தொகையான மேலதிகநேரக் கொடுப்பனவு மற்றும் விடுமுறை தினச் சம்பளம் என்பன பிரத்தியேக பதவியணியினர்களுக்குச் செலுத்தப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட பதவியொன்றின் மாதாந்த மேலதிக நேரம் மற்றும் விடுமுறை தினக் கொடுப்பனவுகளின் கிரயம் ரூபா 54,464 ஆக இருந்ததுடன் தேவைகளை இனங்காணாமல் மேலதிக நேரம் மற்றும் விடுமுறை தின வேலைகளைச் செய்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(இ) மாகாண காணி ஆணையாளர் திணைக்களத்தின் நில அளவையாளர் ஒருவருக்கு 2008 ஆம் ஆண்டுமுதல் 2014 ஆம் ஆண்டு வரை சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 3,709,708 தொகை செலுத்தப்பட்டிருந்த போதும் அவர் நாள்தோறும் சேவைக்கு அறிக்கையிட்டமைக்கோ அல்லது நிகழ்ச்சி திட்டங்களைச் சமர்ப்பித்ததற்கோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட எதிர்கால வேலைக்குறிப்புக்களோ அல்லது அவர்களுக்கு அளவிடைக் கட்டளைகள் விநியோகிக்கப்பட்டமைக்கான சான்றுகளோ கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6.10 ஒப்பந்த நிருவாகத்தில் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நாச்சியா தீவு ஆயுர்வேத மத்திய மருந்தகத்தை நிர்மாணிப்பதற்காக ரூபா 5,619,719 தொகையான ஒப்பந்தத்தின் கால எல்லை 2012 செப்தெம்பர் 10 ஆந் திகதி முதல் 2013 பெப்ரவரி 24 ஆந் திகதி வரையாக இருந்த போதிலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்கள் சமர்ப்பிக்கப்படாது அந்தக் கால எல்லை 02 சந்தர்ப்பங்களின் போது 2013 மே 24 ஆந் திகதி வரை 03 மாதங்களினால் நீடிக்கப்பட்டிருந்தது.

(ஆ) ஒவ்வொரு ஒப்பந்தத்தினதும் மதிப்பிடப்பட்ட பெறுமதி ரூபா 2.5 மில்லியனை விஞ்சிய காலதிவுல்வெவ, கல்அமுண, நாச்சியா தீவு ஆயுர்வேத வைத்தியசாலைகள் மற்றும் தெல்ஹிரியாவை ஆயுர்வேத மருந்து தொழிற்சாலை என்பவற்றை திருத்தியமைப்பதற்காக 04 ஒப்பந்தங்கள் திறந்த கேள்வி நடைமுறைகள் பின்பற்றப்படாது வரையறுக்கப்பட்ட கூறுவிலைகள் பெறப்பட்டு கையளிக்கப்பட்டிருந்தன.

(இ) மாகாண காணி ஆணையாளர் திணைக்களத்தினால் அமுல்படுத்தப்பட்ட மொரகொடை துலான அரச ஊழியர்களுக்கான வீடமைப்பு உத்தேசத் திட்டத்திற்கான நுழைவு வீதியை அமைக்கும் செயற்திட்டத்திற்காக 450 கியூப் மீற்றர் கிரவல் வழங்கி மட்டப்படுத்தி அமைப்பதற்காக மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்தது. உரிய மண் பரவும் அறிக்கை சமர்ப்பிக்கப்படாமையினால் செலுத்தவேண்டிய மொத்தப் பணத்தில் 30 சதவீதமான ரூபா 205,800 தொகை மாத்திரம் செலுத்த வேண்டியிருந்தமை தொழில்நுட்ப உத்தியோகத்தரின் கொடுப்பனவு செய்ய வேண்டுமென பரிந்துரை அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் ரூபா 686,000 தொகையான மொத்தப் பணமும் தலாவ பிரதேச சபைக்குச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) அநுராதபுரம் பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தினால் ரூபா 99,602,472 தொகை செலவில் நிர்மாணிக்கப்பட்ட ''சுனக்க மிதுறு நிவஹன'' 2013 மே 03 ஆந் திகதி திறக்கப்பட்டிருந்த போதிலும் அது 2014 மே மாதம் முதல் மூடப்பட்டிருந்தது. அவ்வாறே ''சுனக்க மிதுறு நிவஹன'' நிர்மாணிக்கும்

ஒப்பந்தத்தின் வேலைகளைப் பூர்த்தி செய்வதற்கான உடன்படிக்கைக் கால எல்லை 84 நாட்களாக இருந்த போதிலும் அதற்காக மேலும் 365 நாட்கள் கால நீடிப்பு வழங்கப்பட்டிருந்தது.

(உ) போதியளவான நிதி இயலுமை மற்றும் உபகரண வசதிகள் காணப்படுகின்றமை உறுதிப்படுத்தப்படாத 07 சனசமூக சங்கங்களுக்கு அநுராதபுரம் பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தினால் ரூபா 10,160,761 தொகையான 07 ஒப்பந்தங்கள் கையளிக்கப்பட்டிருந்தன.

## 6.11 பதவியணியினர் நிருவாகம்

### 6.11.1 அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினர்

திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு வடமத்திய மாகாண சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) மாகாண சபை அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்கள்

| | | அங்கீகரிக்கப்பட்ட | உள்ளபடியான | மிகை | (பற்றாக்குறை) |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 633 | 261 | - | (732) |
| (ii) | மூன்றாம் நிலை | 249 | 177 | - | (72) |
| (iii) | இரண்டாம் நிலை | 3702 | 2038 | - | (1663) |
| (iv) | ஆரம்ப நிலை | 1742 | 1315 | - | (427) |
| (v) | ஏனையவை (அமைய, தற்காலிகம்) | 13 | 683 | 670 | - |
| | | 6339 | 4474 | 670 | (2534) |

(அ) கைத்தொழில் அபிவிருத்தித் திணைக்களத்திற்காக 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 157 ஆக இருந்த போதிலும் 116 மாத்திரம் சேவையில் ஈடுபட்டிருந்தமையினால் 43 வெற்றிடங்களும் 02 மிகையும் காணப்பட்டன.

(ஆ) வடமத்திய மாகாண சபையினால் உள்ளகக் கணக்காய்வு மற்றும் புலனாய்வு நடவடிக்கைகளுக்காக மாகாண உள்ளகக் கணக்காய்வு மற்றும் புலனாய்வுத் திணைக்களம் தாபிக்கப்பட்டிருக்கும் போது பிரதம அமைச்சின் கீழ் புலனாய்வு உத்தியோகத்தரொருவர் நியமிக்கப்பட்டு மீளாய்வாண்டின் போது அவருக்கு ரூபா 883,058 தொகை சம்பளமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

## 6.11.2 பாடசாலைப் பதவியணியினர்

| | | அங்கீகரிக்கப்பட்ட | உள்ளபடியான | மிகை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | அதிபர் | 1000 | 754 | - | 246 |
| (ii) | ஆசிரியர்கள் | 15940 | 14688 | - | 1252 |
| (iii) | ஆசிரிய உதவியாளர்கள் | - | 389 | 389 | - |
| (iv) | திட்டமிடல் மற்றும் நிதி உதவியாளர்/ அபிவிருத்தி உதவியாளர்/ நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் | 796 | 96 | - | 700 |
| (v) | ஆய்வுகூட உதவியாளர்/ விடுதிக் கட்டுப்பாட்டாளர் | 60 | 17 | - | 43 |
| (vi) | பாடசாலை அலுவலக உதவியாளர் | 417 | 62 | - | 355 |
| (vii) | காவலாளிகள் | 339 | 33 | - | 306 |
| | | 18552 | 16039 | 389 | 2902 |

### 6.11.3 வைத்தியசாலைப் பதவியணியினர்

| | | அங்கீகரிக்கப்பட்ட | உள்ளபடியான | மிகை | (பற்றாக்குறை) |
|---|---|---|---|---|---|
| (i) | விசேட வைத்திய உத்தியோகத்தர்கள் | 21 | 09 | - | 12 |
| (ii) | தரம் பெற்ற வைத்திய உத்தியோகத்தர்கள் | 356 | 278 | - | 78 |
| (iii) | ஏனைய வைத்திய உத்தியோகத்தர் | 85 | 90 | 5 | - |
| (iv) | தாதி உத்தியோகத்தர்கள் (வைத்தியசாலை) | 590 | 464 | - | 126 |
| (v) | தாதி உத்தியோகத்தர் (பொது சுகாதார) | 31 | 19 | - | 12 |
| (vi) | மத்தியதர தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் | 182 | 222 | 40 | - |
| (vii) | தொழிலாளர்கள் (பொது) | 329 | 225 | - | 104 |
| (viii) | தொழிலாளர்கள் (சுகாதார) | 350 | 234 | - | 116 |
| (ix) | மேற்பார்வையாளர்கள் | 435 | 334 | - | 101 |
| | | 2379 | 1875 | 45 | 549 |

## 07. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 7.1 செயல்நடவடிக்கைத் திட்டம்

பொது நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் 2010 மார்ச் 10 ஆந் திதகிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம் மாகாண சபை மற்றும் அதன் ஒவ்வொரு அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களினால் மீளாய்வாண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 7.2 உள்ளகக் கணக்காய்வு

மாகாண சபையின் உள்ளகக் கணக்காய்வு மற்றும் புலன் விசாரணைத் திணைக்களத்தின் பிரதான நோக்கம் மற்றும் செயற்பாடுகளான மாகாண சபையின் மாகாண சபையின் அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களின் பிழைகள் மற்றும் மோசடிகளைத் தவிர்த்தல் மற்றும் சொத்துக்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக அறிமுகப்படுத்தப்பட்ட உள்ளகக் கட்டுப்பாட்டு முறைகளில் சாத்தியத் தன்மையினை பரிசோதனை செய்து அவற்றின் பலவீனங்களை பரிசீலனை செய்து பலவீனங்களை மாற்றியமைப்பதற்கு ஆலோசனை வழங்குதல் ஆகும். ஒவ்வொரு ஆண்டுகளிலும் கணக்காய்வு மற்றும் புலன் விசாரணைகளைக் கையளிக்கும் போது மாகாண சபையின் 05 அமைச்சுக்கள், 16 திணைக்களங்கள், அமைச்சிற்குக் கீழ் கொண்டுவரப்படாத 09 நிறுவனங்கள் மற்றும் 05 அதிகார சபைகளை உள்ளடக்கிய சகல நிறுவனங்களிலும் உள்ளகக் கட்டுப்பாட்டில் பிரதான குறைபாடுகளை இனங்காணக்கூடிய வகையில் அது மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் மாகாண உள்ளகக் கணக்காய்வு மற்றும் புலன் விசாரணைத் திணைக்களத்தின் 2014 ஆம் ஆண்டின் கணக்காய்வுத் திட்டத்தின் படி திணைக்களத்திற்குரிய 730 தொகையான முழு மனித நாள் அளவும் 02 அமைச்சின் கணக்காய்விற்காக மாத்திரம் ஒதுக்கப்பட்டிருந்தது.

## 7.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

2009 யூன் 09 ஆந் திகதிய டீஎம்ஏ/2009(1) ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றுநிருபத்தின் 6 ஆம் பந்தியின் படி கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் கீழ் காலாண்டிற்கு ஒரு தடவையாவது கூட்டம் நடாத்தப்பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது மாகாண சபையின் எந்தவொரு அமைச்சினாலும் / திணைக்களத்தினாலும் ஒரு கூட்டமேனும் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

## 7.4 கொள்வனவுத் திட்டம்

2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றுநிருபத்தின் பிராகாரம் மாகாண சபையின் அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களினால் 2014 ஆண்டிற்கான கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 08. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) ஒப்பந்த நிருவாகம்

(ஈ) நிலையான சொத்துக்கள்

(உ) நிதியங்களின் பயன்பாடு

(ஊ) மனித வள முகாமைத்துவம்

(எ) செயற்திட்டங்களைத் திட்டமிடலும் அமுலாக்கலும்

(ஏ) கொள்வனவு நடைமுறைகள்

(ஐ) களஞ்சியக் கட்டுப்பாடு

(ஒ) வருகை மற்றும் மேலதிக நேரக் கட்டுப்பாடு